திரு. துரை அன்பரசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்தின் மூலமாக தொழில் தொடங்கி நடத்தி வருகிற நேரத்தில் அதன் மூலம் நட்டம் வருகிறது என்ற காரணத்தால் சில நிறுவனங்கள் மூடப்பட்டு இருக்கின்றன. அப்படி மூடப்பட்ட நிறுவனங்கள் எத்தனை? அதனால் வேலை இழந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல்—10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நஷ்டமடைந்து மூடப் பட்டதாக அரசுக்கு எந்தத் தகவலும் வரவில்லை. ஆதாரம் ஏதாவதுஇருந்து உறுப்பினர் அதனைத்தருவார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை அன்பரசன்: தலைவர் அவர்களே, அதேபோல் தென்னாற்காடு மாவட்டத்தில் நிறைய நிலையங்கள் மூடப் பட்டிருப்பதாக எனக்கு செய்தி வந்திருக்கிறது. அதனால் ஏராள மான பேர்கள் வேலை இழந்திருக்கிறார்கள் என்பதும் தெரி கிறது. அதை எழுத்து மூலமாகக் கூட கொடுக்கிறேன். அப்படித் தருகிறபோது அவர்களுக்கு மாற்றுப்பணி ஏற்படுத்தித் தரமாண்பு மிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரிந்திருக்கிறது, செய்தி வந்திருக்கிறது என்பதை வைத்துமட்டும் குறிப்பிட்ட ஒருபதிலைச் சொல்லி விட முடியாது. குறிப்பாக ஏதாவது ஆதாரத்தை காட்டுவார்களானால் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ளும்.

ஆற்காடு வட்டத்தில் கதர்த்துறை மூலம் காகிதம் தயாரித்தல்

64—(*வினா எண். 9115) திரு. த. பழனி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டத்தில் கதர்த்துறை மூலமாக காகிதம் தயா ரிக்கப்படும் அலகு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தர்ராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு வட்டத்தில் ஆரப் பாக்கம் என்னுமிடத்தில் ஏற்கெனவே ஒரு கைமுறைக் காகித அலகு அமைக்கப்பட்டு, இயங்கி வருகிறது. இவ்வட்டத்தில், மேலும் புதிதாக கைமுறை காகித அலகுஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஆற்காடு வட்டத்தில் அமைந்திருக்கிற ஆரப்பாக்கம் கிராமத்திலிருக்கிற கைமுறைக் காகித அலகு தொழிற்கூடத்தில் எத்தனை தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள்? அந்தத் தொழி லாளர்கள் அங்கு தினக்கூலியாகப் பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா? அந்தத் தொழிற் கூடத்தை விரிவுபடுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது அந்தக் கைமுறைக்காகித அலகில் 25 டன் மேலட்டை தாளும், 10 டன் படியெடுக்கும் தாளும் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலமாக 35 பேர்கள் பய னடைந்து வருகிறார்கள். இதிலே பணியாற்றுகின்றவர்களை நிரந்தரம் ஆக்குவதற்கான வழிமுறைகளை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. த. பழனி : தலைவர் அவர்களே, அவர்கள் கடந்த 10, 12 ஆண்டுகளாக அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார் கள். தினந்தோறும் அவர்கள் மத்தியில் ஏற்படும் தொழில் தகராறுகள் போன்ற பல்வேறு சிக்கல்களும், சங்கம் அமைத்துக் கொள்வதும், வேலைக்கு போகாமல் இருப்பதும் அவர்கள் நிரந் தரம் ஆக்கப்படாமல் இருப்பதற்கு காரணங்களாக அமை கின்றன. ஆகவே அரசு இதில் வேகமாக நடவடிக்கையெடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர் களே, ஒரு தொழில் கூடத்தில் இருக்கிறவர்கள் அத்தனை பேரை யும் நிரந்தரம் ஆக்க வேண்டுமென்கிறபோது அந்தத் தொழில் கூடத்தினுடைய தாங்குகிற தன்மையையும், அது தயாரிக்கின்ற பொருள்கள் விற்பனையாகின்ற தன்மையையும், அதன் மூலமாக வருகிற இலாபத்தையும் நாம் கணக்கிலே கொள்ள வேண்டும். இது குறிப்பாக கிராமங்களில் இருக்கிற மக்கள் பயனடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு துவங்கப் பட்டிருக்கிற தொழி லாகும். இந்தத் தொழில் தற்போது தான் நம்முடைய மாநிலத் தில் விரிவாக, கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருகிறது

ஆகவே அதனுடைய முன்னேற்றத்தைப் பொறுத்து தொழிலாளர்களுடைய நலன் கவனிக்கப்படும். எங்காவது பிரச்சினைகள் வருமானால் நம்முடைய கதர் வாரியத்தின் மூலமாகப்பேசி, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்த்து வருகிறோம்.

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, கதர்த் துறையினுடைய வெள்ளி விழாவை முன்னிட்டு தமிழகம் முழுவதிலும் 25 கிராமங்களை துறை தத்து எடுத்துக் கொண்டது. அப்படி தத்து எடுத்துக் கொண்ட ஊர்களில் கதர்த்துறைமூலம் பல்வேறு மக்களுக்கு வேலை தருகிற பணிகளை அரசு துரிதப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

அரசு கட்டுமான ப்பணியில் மதிப்பீட்டுத் தொகைக்கு கூடுதலாக டெண்டர் போடுதல்.

65—(*வினா எண்.4968) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒப்பந்தக்காரர்கள் கூட்டுச் சேர்ந்துகொண்டு அரசு கட்டுமானப் பணியில் மதிப்பீட்டுத் தொகைக்குக் கூடுதலாக டெண்டர் போடுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத்தவிர்க்க அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராம்ச்சந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இது பற்றியதகவல்கள் ஏதும் இல்லை. குறிப்பிட்ட புகார்கள் வந்தால் விசாரித்து ஆவன செய்யப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : அரசு கட்டுமானப் பணிகளுக்கு டெண்டர் போடுகிறபோது ஒப்பந்தக்காரர்கள் சங்கம் அமைத்துக்கொண்டு, கூடிப் பேசிக்கொண்டு அரசு நிர்ணயிக்கிற தொகைக்கு மேலே கூடுதலாகப் போடுகிற வழக்கம் எல்லாத் துறைகளிலும் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதை அரசாங்கமே தவிர்ப்பது என்றாலும் கூட மிகக் கடுமையான